செய்திக் குறிப்பு

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், வேலூர் பிரிவின் மூலம் வேலூர் மாவட்டத்தில் சர்வதேச திறனாளர்களைக் கண்டறியும் திட்டத்தின்கீழ் (World Beaters Talent Spotting Scheme) 6வது, 7வது மற்றும் 8ம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவியருக்கான கல்வி மாவட்ட அளவிலான போட்டிகள் 100மீ, 200மீ, 400மீ, நீளம் தாண்டுதல், உயரம் தாண்டுதல் மற்றும் குண்டு எறிதல் ஆகிய பிரிவுகளில் நடத்தப்படவுள்ளன.

தற்சமயம் வேலூர் மாவட்டம் மூன்றாகப் பிரிக்கப்பட்டு இராணிப்பேட்டை மற்றும் திருப்பத்தூர் ஆகிய புதிய மாவட்டங்கள் உருவாகியுள்ள நிலையில், வேலூர் மற்றும் திருப்பத்தூர் ஆகிய 2 கல்வி மாவட்டங்களுக்கு மட்டுமே போட்டிகள் நடத்திடத் தகவல் பெறப்பட்டுள்ளதால், பள்ளிகளில் நடப்புக் கல்வியாண்டில் 6வது, 7வது மற்றும் 8வது வகுப்பு பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு பழைய முறையிலேயே வேலூர் கல்வி மாவட்டத்தில் உள்ளடக்கிய பள்ளிகளுக்கு **வேலூர் கல்வி மாவட்ட அளவிலான போட்டிகள் 11.03.2020 அன்று நேதாஜி விளையாட்டரங்கில் காலை 8.00 மணி முதல்** நடத்தப்பட உள்ளது.

நிபந்தனைகள் :-

1. 2019–2020ம் ஆண்டு உலகத் திறனாய்வுத் திட்டத்தின் கீழ் **(World Beaters Talent Spotting Scheme)** 6,7 மற்றும் 8 வகுப்பு பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு உடற்திறன் தேர்வுப் போட்டிகள் (Battery of Tests) நடத்தி <u>அறிக்கை அளித்த பள்ளிகள் மட்டுமே</u> மாணவ, மாணவியர்களை அனுப்பலாம்.
2. தேர்வுப்போட்டிகளில் பங்கேற்று முறையே 10,9,8 மதிப்பெண்கள் எடுத்த மாணவ, மாணவியர்கள் மட்டுமே இதில் பங்குபெறத் தகுதியுடையவராவர்.
3. போட்டிகள் 100மீ, 200மீ, 400மீ, நீளம் தாண்டுதல், உயரம் தாண்டுதல் மற்றும் குண்டு எறிதல் ஆகிய பிரிவுகளில் நடத்தப்படவுள்ளன.
4. போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பிடித்து வெற்றிபெறுவோருக்கு ரொக்கப் பரிசாக முதல் பரிசு தலா ரூ.80/–, இரண்டாம் பரிசு தலா ரூ.60/– மற்றும் மூன்றாம் பரிசாக ரூ.40/– மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்படும்.
5. ஒருவர் அதிகபட்சமாக ஏதேனும் மூன்று போட்டிப் பிரிவுகளில் மட்டுமே பங்கேற்கலாம்.
6. முதலிடம் பெற்ற மாணவ, மாணவியர்கள் மண்டல அளவிலான போட்டிகளில் பங்கேற்கலாம்.
7. மண்டல அளவிலான போட்டிகளில் கலந்துகொண்டு முதல் 10 இடங்களைப் பிடிக்கும் மாணவ, மாணவியர்களுக்கு தலா ரூ.6,000/ ரொக்கப்பரிசு மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்படும். மேலும், அவர்கள் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தால் நடத்தப்படும் கோடைகாலப் பயிற்சி முகாம்களுக்கும், இன்னபிற அகாடமிகளுக்கும் தேர்வு செய்யப்படுவர்.
8. இதில் கலந்து கொள்ள பயணப்படி மற்றும் தினப்படி எதுவும் வழங்கப்படமாட்டாது.

மேலும் விவரங்களுக்கு மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் அவர்களை அலுவலக நேரங்களில் தொடர்பு கொள்ளலாம்.

மாவட்ட ஆட்சித் தலைவர், வேலூர்